புதுக்கோட்டை, வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: திரு இராம.சிவகுமார், பி.எஸ்ஸி(விவ)எம்பிஏ.,

செமுக.அ4/7607/2020

நாள் 06.10.2020

பொருள் பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி.IV-ல் அடங்கிய பணிகள் - 2018-19 மற்றும் 2019-20 ஆண்டுகளில் தேர்வாணையம் வாயிலாக இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது ) ஆக தேர்வு செய்யப்பட்டு இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டவர்கள் - பணி நியமனம் வழங்கி உத்தரவிடப்பட்டது - பணிவரன்முறை செய்து ஆணையிடல் - தொடர்பாக.

பார்வை
1. செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3 க.எண்.2359/PSD-1/2020, நாள் 29.5.2020
2. சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செமுக.அநிபி5/22094/2020, நாள் 5.8.2020
3. இவ்வலுவலக செமுஆ.அ4/7607/2020, நாள் 14.8.2020

.. .. ..

ஆணைகள்:

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தொகுதி-IV ன் கீழ் 2018-19 மற்றும் 2019-20 ஆண்டுகளில் இளநிலை உதவியாளர்(பிணையம் அற்றது ) பதவிக்கு பார்வை 1-ல் கண்டவாறு தேர்வு செய்யப்பட்டு, பார்வை 2-ல் கண்ட ஆணையின்படி இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கும் பொருட்டு இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்கண்ட பணியாளர்களுக்கு, பார்வை 3-ல் கண்ட இவவலுவலக செயல்முறை ஆணைகளின்படி ரூ.19500-62000 (Level-8) என்ற ஊதிய விகிதத்தில் இளநிலை உதவியாளர் (பி.அ) ஆகப் பணி நியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி திருவாளர்கள் | தேர்வாணைய வ.எண் | அரசுப் பணியில் சேர்ந்த நாள் | தற்போது பணிபுரியும் அலுவலகம் |
|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. |
| 1. | தா.சுதா<br>இளநிலை உதவியாளர் | 70 | 01.9.2020<br>முற்பகல் | வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், பொன்னமராவதி |
| 2. | ச.கார்த்திகேயன்<br>இளநிலை உதவியாளர் | 83 | 20.8.2020<br>முற்பகல் | வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம், புதுக்கோட்டை |
| 3. | மு.காசிநாதன்,<br>இளநிலை உதவியாளர் | 87 | 20.8.2020<br>முற்பகல் | வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், அரிமளம் |
| 4. | க.வினோத்குமார்<br>இளநிலை உதவியாளர் | 89 | 27.8.2020<br>முற்பகல் | வேளாண்மை உதவி இயக்குநர், அலுவலகம், விராலிமலை |

த.பி.பா.,

பார்வை 2-ல் கண்ட ஆணையில் பத்தி எண்.3 மற்றும் 5-ல் குறிப்பிட்டுள்ளவாறு மேற்கண்ட அட்டவணையில் இடம்பெற்றுள்ள பணியாளர்களை கலம்.4-ல் கண்டவாறு அரசுப் பணியில் சேர்ந்த நாள் முதல் பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

இப்பணிவரன்முறை உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் மதுரை அமர்வில் இப் பணிநியமனம் தொடர்பாக நிலுவையிலுள்ள ரிட் மனுக்களில் வழங்கப்படும் இறுதித் தீர்ப்புக்கு உட்பட்டது. "This regularization is subject to the outcome of the W.P's pending on the files of the Honourable High Court of Madras/Madurai Bench of the Honourable High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination-IV for the year 2018-19 and 2019-20 recruitment.

மேற்கண்ட இளநிலை உதவியாளர்கள் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளில் இருந்து இரண்டு ஆண்டு கால தகுதிகாண் பருவத்தினை மூன்றாண்டு தொடர் பணிக்காலத்திற்குள் முடிக்க வேண்டும். இப்பணியாளர்கள் பவானிசாகர் அடிப்படை பயிற்சியினை நிறைவு செய்து, அதனைத் தொடர்ந்து தகுதிகாண் பருவம் முடித்ததாக ஆணையிட்ட பின்னரே இளநிலை உதவியாளர் பதவியில் 2-வது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகளை பெறத் தகுதியுடையவர்கள் என ஆணையிடப்படுகிறது.

ஒம்/-இராம.சிவகுமார்,
வேளாண்மை இணை இயக்குநர்
புதுக்கோட்டை

பெறுநர்
மேற்கண்ட பணியாளர்கள்
கட்டுப்பாட்டு அலுவலர்கள் மூலமாக

நகல்: பி1 பிரிவு - இவ்வலுவலகம்

நகல்: வேளாண்மை உதவி இயக்குநர், பொன்னமராவதி/அரிமளம்/விராலிமலை

நகல்: சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
(அநிபி.5 பிரிவு)

//உத்தரவின்படி//

கண்காணிப்பாளர்

6.10.2020